உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்

# நான்மணிக்கடிகையில் இசை

**முனைவர்.வா.வெ.கோவிந்தம்மாள்**
**இணைப் பேராசிரியர், சாரதா கங்காதரன் கல்லூரி, புதுச்சேரி.**

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நீதி நூல்களில் இலக்கியச் சுவையும், கற்பனையும் குறைவாகத் தோன்றினும், அவை மக்கள் வாழ்வை வளப்படுத்தும் சீரிய தொண்டினைச் செய்கின்றன. இத்தகைய நீதி நூல்களில் ஒன்று நான்மணிக்கடிகை. நீதி இலக்கியங்கள் தமிழ்ச் சமுதாயத்தை நன்னெறிப்படுத்தி மகிழ்ச் சமுதாயமாக மாற்றும் நோக்கில் இயற்றப்பட்டன. அறத்தைக் காட்டி, மக்களை அறப்பாதை நோக்கி நடக்கக் கூறின. இத்தன்மை வாய்ந்த நீதி இலக்கியமான நான்மணிக்கடிகையில் பறை, யாழ், பண் இவை பற்றி கூறப்பட்டுள்ள கருத்துகளை ஆய்வதையே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நான்மணிக்கடிகை

இந்நூல் நான்கு மணிகள் பதிக்கப் பெற்ற தோள்வளை போல் நான்கு நீதி மணிகளால் நிலைநாட்டப்பட்ட பாடல்களைக் கொண்ட நூல். 106 பாடல்களைக் கொண்டது. முதல் இரண்டு பாடல்கள் கடவுள் வாழ்த்து பாடல்களாக அமைந்துள்ளன. நான்கு, நான்கு கருத்துகளைக் கொண்டு நூல் முழுவதும் பாடப்பட்டுள்ளது. வெண்பா என்னும் பாவகையால் ஆனது. இதன் ஆசிரியர் விளம்பிநாகனார். கி.பி.நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வீட்டுப் பேற்றினை அடைய ஒவ்வொருவரும் முயலவேண்டும் என்பது இந்நூலாசிரியரின் கருத்து.

## இசையின் தோற்றம்

மொழி தோன்றுவதற்கு முன்பே இசை தோன்றியது. ஆயகலைகள் அறுபத்தி நான்கில் இசைக்கலை அனைத்துயிர்களையும் கட்டுப்படுத்தும் திறமையுடையது. தமிழர்கள் இசையை வாழ்வின் ஓர் அங்கமாகக் கொண்டவர்கள். முத்தமிழில், இசைத்தமிழை நடுவில் வைத்து மகிழ்ந்தனர். இசையால் மலர்கள் மலர்ந்ததாகவும், யானைகள் மயங்கியதாகவும், பாலை நிலத்தில் கள்வர்கள் தம் தொழிலை மறந்ததாகவும்,

பேய்களும், நரிகளும் நடுங்கி ஓடியதாகவும், பல சுவையான செய்திகளைச் சங்க நூல்கள் கூறுகின்றன. நாட்டுப்புறங்களில் தாலாட்டு முதல் ஒப்பாரி வரை வாழ்க்கை முழங்குவதும் இசை பங்குகொள்கிறது.

## இசை – பொருள்

இசை என்னும் சொல் இசைப்பது, தன்வயப்படுத்துவது என்று பொருள்படும். 'சுதி, பண், பாட்டு, தாளம், பக்கயியம், பாடுவோர் உள்ளம், கேட்போர் உள்ளம் ஆகிய அனைத்தும் இசைந்தால்தான் அதற்கு இசையென்று பெயர், இல்லையென்றால் இறைச்சல்' என்பர். 'இசை இன்பக் கலைகளின் முடி' என காண்ட் என்னும் அறிஞர் கூறியுள்ளார். இசைக்குப் "புகழ்" என்ற பெயரும் உண்டு. 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற தொடரால் இதனை அறியலாம்.

## இசையின் ஆற்றல்

இசையின் தன்மை இன்புறுத்துவது மட்டுமல்லாமல் தன்னிலை இழக்கச் செய்து கல்லார், கற்றோர் என அனைவரையும் களிப்படையச் செய்வதுமாகும். இசை கல் மனதையும் கரையச் செய்து, இரக்க உணர்வையும், பக்தியுணர்வையும் பெருகச் செய்யும் தன்மையுடையது. களைப்பைப் போக்கிக் களிப்படையச் செய்து, பல்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றலுடையது என்பதைப் பல இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

## நான்மணிக்கடிகையில் பறை

பறை ஒரு தமிழிசைக் கருவியாகும். தோலால் செய்யப்பட்ட மேளமாகும். 'பறை' என்ற சொல் பேச்சைக் குறிப்பதாகும். பேசு எனப் பொருள்படும் 'அறை' என்ற சொல்லினின்று 'பறை' தோன்றியது (நன்னூல்458). பேசுவதை இசைக்கவல்ல தாளக்கருவி 'பறை' எனப்பட்டது. பறை ஓர் இசைக்கருவி மட்டுமல்ல. தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து. தோலிசைக் கருவிகளின் தாய். தமிழினத்தின் தொன்மையான அடையாளம். உழைக்கும் மக்களின் இசைக்களஞ்சியம். தமிழர் வாழ்வியலின் முகம் என பலவாறாக உவமிக்கப்படுகிறது. தற்போது நாட்டுப்புற இசையில் இந்தக் கருவி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**"பறை நன்று பண்ணமையா யாழின்" (நான்மணி – 15)**

என்ற அடியில் பண்ணிசை அமையாத யாழின் இசையைவிட, மரத்தால் செய்யப்பட்டு தோலால்; கட்டப்பட்ட பறை என்னும் பேரோசைக் கருவி நன்று என்பது கூறப்படும் கருத்து. இங்கு பறை என்பது ஒரு வகை இசைக்கருவியாக இருந்தாலும் யாழைவிட இனிமையானதாகக் கருதப்படவில்லை என்பதும், அதே நேரம் யாழின் இசை பாடலோடு இயைந்து இருக்கவேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

**"பறைபட வாழா அசுணமா........" (நான்மணி – 4)**

இப்பாடலில் அசுணமா என்கிற பறவை இனிமையான இசையைத்தான் கேட்கும். அப்போது அதன் மனம் உருகி, இளகி, நீராய் ஆகிவிடும். அப்போது பறை என்ற பேரோசைக் கருவியின் இசை காதில் விழுந்தவுடன் இறந்துவிடும் எனக் கூறப்படுகிறது.

### நான்மணிக்கடிகையில் யாழ்

யாழ் என்பது பண்டைய இசைக்கருவிகளில் மிகச் சிறப்பு வாய்ந்தாகும். யாழ் என்பதற்கு நரம்புகளால் யாக்கப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்பது பொருள். பொதுவாக இசையைத் தோற்றுவிக்கும் கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி என்று வகைப்படுத்துவர். இவற்றில் நரம்புக்கருவியாகிய யாழே தமிழர் வாசித்த முதல் இசைக்கருவியாகும். யாழ் பாடிக்கொண்டே இசைக்கும் கருவியாக இருந்துள்ளது. தமிழர்கள் யாழிலிருந்து பிறக்கும் இசைக்கே முதன்மையளித்தனர்.

**"........................ பண் அதிர்ப்பின்**
**பாடல் அதிர்ந்து விடும்" (நான்மணி – 21)**

இப்பாடலில் யாழின் நரம்புக் கட்டுகள் அதிர்ந்துவிட்டால் அதில் பிறக்கும் பாட்டுகளும் அதிர்ந்துபோகும் என்று பொருள் கூறப்படுகிறது. யாழ் என்பது மென்மையாகக் கையாளப்படும் ஓர் இசைக்கருவி. அதை வன்மையாகக் கையாளும்போது கருவியும் பாழாகும், அதிலிருந்து பிறக்கும் இசையும் பாழாகும் என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து இசையும், பாடலும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்பது பெறப்படுகிறது.

**"....................... பண்ணிய**
**யாழொக்கும் நட்டார் கழருஞ்சொல்" (நான்மணி – 101)**

இப்பாடலடியில் கூறப்படும் கருத்து நட்புடையவர்கள் இடித்துரைக்கும் வன்சொல் நரம்புகளால் இசை கூட்டப்பட்ட யாழிசையைப் போன்ற இனிமையுடையதாகும்

என்பதாகும். இங்கு நண்பர்கள் இடித்துரைப்பது வன்சொல்லாக இருந்தாலும், வாழ்விற்கு நலம் தந்து யாழின் இனிமையான இசையைப் போன்று இன்பத்தை அளிக்கவல்லது என உவமை கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**"பறை நன்று பண்ணமையா யாழின்" (நான்மணி – 15)**

என்ற அடியில் பண்ணிசை அமையாத யாழின் இசையைவிட, மரத்தால் செய்யப்பட்டு தோலால்; கட்டப்பட்ட பறை என்னும் பேரோசைக் கருவி நன்று என்பது கூறப்படும் கருத்து. இங்கு பறை என்பது ஒரு வகை இசைக்கருவியாக இருந்தாலும் யாழைவிட இனிமையானதாகக் கருதப்படவில்லை என்பதும், அதே நேரம் யாழின் இசை பாடலோடு இயைந்து இருக்கவேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

### நான்மணிக்கடிகையில் பண்

இசை எழுத்து போன்றது. பண் சொல் போன்றது. பண் என்பது இசையின் அடிப்படை வடிவங்களில் ஒன்று. இசையொலிகளை வகைப்படுத்தி அவ்வொலிகளால் பல்வேறு இசைப்போக்குகளுடன் உள்ளத்தில் ஓர் உணர்வு ஓங்க அமைக்கப்படுவது பண் என்பர். 2500 ஆண்டுகளுக்கும் மேலாக பண் இசை தமிழகத்தில் இருந்து வந்துள்ளது. தொன்றுதொட்டு வழங்கிவரும் முத்தமிழ் என்பதில் உள்ள இசைத்தமிழ்தான் பண்ணிசை. சங்க இலக்கியங்களில் பண்களைப் பற்றி பல குறிப்புகள் உள்ளன. இக்குறிப்புகள் அக்காலத்தில் இருந்த இசையின் நுட்பம், வளர்ச்சி பற்றி தெளிவாகக் கூறுகின்றன.

**"பறை நன்று பண்ணமையா யாழின்" (நான்மணி – 15)**

என்ற அடியில் பண்ணிசை அமையாத யாழின் இசையைவிட, மரத்தால் செய்யப்பட்டு தோலால் கட்டப்பட்ட பறை என்னும் பேரோசைக் கருவி நன்று என்பது கூறப்படும் கருத்து. இங்கு பறை என்பது ஒரு வகை இசைக்கருவியாக இருந்தாலும் யாழைவிட இனிமையானதாகக் கருதப்படவில்லை என்பதும், அதே நேரம் யாழின் இசை பாடலோடு இயைந்து இருக்கவேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

**"…………………… பண் அதிர்ப்பின்**
**பாடல் அதிர்ந்து விடும்" (நான்மணி – 21)**

இப்பாடலில் யாழின் நரம்புக் கட்டுகள் அதிர்ந்துவிட்டால், அதில் பிறக்கும் பாட்டுகளும் அதிர்ந்துபோகும் என்று பொருள் கூறப்படுகிறது. யாழ் என்பது மென்மையாகக் கையாளப்படும் ஓர் இசைக்கருவி அதை வன்மையாகக் கையாளும்போது கருவியும்

பாழாகும், அதிலிருந்து பிறக்கும் இசையும் பாழாகும் என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து இசையும், பாடலும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்பது பெறப்படுகிறது.

"…………………. பண் இனிது
பாடல் உணர்வார் அகத்து." (நான்மணி – 39)

இவ்வடிகள் இசையோடு இணைந்த பாடலை உணர்வொன்றி கேட்கும்போது இனிமையாக இருக்கும் எனக் கூறுகின்றன. அதாவது இசையோடு இணைந்து பாடலையும், அதன் பொருளையும் அகத்தில் உணர வல்லவர்களுக்கு இசையும், பாடலும் கேட்கும்போது இனிமையாக இருக்கும் என்பதை அறிய முடிகிறது.

"பாடல் சாம் பண்ணறியா தார்முன்னர்" (நான்மணி – 47)

இப்பாடலடியின் மூலம் பண்ணிசை அறியாதவர்களிடம் அரிய இசை பொருத்தங்களுடன் பாடும் பாடல்கள் பயனற்றவை. இசையை அறியாதவர்முன் எத்தகைய அரிதான பாடலைப் பாடினாலும் அதனால் பயனொன்றுமில்லை என்பது பெறப்படுகிறது.

"………………….. பாட்டுள்ளும்
பாடெய்தும் பாட லுள" (நான்மணி – 65)

இவ்வடிகள் பாட்டுகள் உள்ளேயும் சிறந்த பாட்டுகள் இருக்கின்றன எனக் கூறுகின்றன. இசைக்குள்ளே சிறந்த இசை இருப்பது போல, உலகில் பல பாடல்கள் இருந்தாலும் பெருமையுள்ள, சிறப்புமிக்க பாடல்களும் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

நான்மணிக்கடிகையில் பண் என்பது, இசையைக் குறிக்கும் சொல்லாக பயன்படுத்தப்பட்டுள்ளது. 15, 21, 39, 47, 101 ஆகிய ஐந்து பாடல்களில் பண் எனவும், 65 ஆம் பாடலில் பாட்டு எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### முடிவாக

சங்க கால அகத்திணையில் கூறப்படும் பதினான்கு வகை கருப்பொருள்களுள் பறை, யாழ், பண் போன்றவை சங்கம் மருவிய கால நீதி இலக்கியங்களில் பாடுபொருளாகக் கையாளப்பட்டுள்ளன. பறை, யாழ், பண் இவற்றின் தாக்கம் சங்ககாலம் தொடங்கி, நீதி இலக்கியங்களிலும் தொடர்ந்துள்ளன. இசை பறவைகளையும் வயப்படுத்தியுள்ளது. நான்மணிக்கடிகை இசைக்கருவிகளைச் சான்றுகாட்டி மக்களை

நன்னெறிப் படுத்தியுள்ளது. இசை ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் வரை அனைத்துயிர்களையும் ஆட்டி வைக்கும் ஆற்றலுடையது என்பது உணர்த்தப்படுகிறது.

**துணை நூல்கள்**


1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சாரதா பதிப்பகம், சென்னை.
2. செம்மொழித் தமிழின் 16 செல்வங்கள், முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.
3. தமிழ் இலக்கிய வரலாறு, பாக்கிய மேரி, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. தொல்காப்பியம், தமிழண்ணல், 2005, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.


utsmdu2@gmail.com


# உலகத்தமிழ்

**உலகத் தமிழ்ச் சங்கம் வழங்கும் மின்னிதழ்**


((((((((((()))))))))))